பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 28 | சனிக்கிழமை | 13.12.2025 | அதிர்வு 135

பகிடிவதை குற்றச்சாட்டு:

# பல்கலை மாணவர்கள் 19 பேருக்கும் பிணை!

(எஸ்.நிதர்ஷன்)

பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட 06

# யாழ்ப்பாணத்தில் கிணற்றில் வீழ்ந்து பெண் ஒருவர் சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – அனலைதீவு பகுதியில் நீர் நிறைந்த கிணற்றில் தவறி வீழ்ந்து 56 வயதுடைய பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் 06

# முன்னாள் சபாநாயகர் பிணையில் விடுவிப்பு



கைது செய்யப்பட்ட முன்னாள் சபாநாயகரும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வலவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

அசோக ரன்வல, வீதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பொலி ஸாரினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டிருந்தார். 06

# இயற்கைப் பேரிடரால் மக்களைக் காட்டிலும் எதிரணியே நெருக்கடி



## இப்படிச் சாடுகின்றது அரசு

**“இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் பொது மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதைக் காட்டிலும் எதிர்க்கட்சியினர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். எதிர்க்கட்சியினர் இந்தளவுக்குக் கீழ்த்தரமாகச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இவர்களின் நிலைமையையிட்டு கவலையடைகின்றோம்.”**

**- இவ்வாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.** 06

# எம்.பியாகப் பதவியேற்கக் காய்நகர்த்தும் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ், சிங்களப்புத்தாண்டின்பின்னர்நாடாளுமன்ற உறுப்பினராகும் எண்ணத்தில் இருக்கின்றார் என்று எதிர்க்கட்சியின் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்திருந்த ரணில் விக்கிரமசிங்க, 2021ஆம் ஆண்டு மீண்டும் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அரகலய போராட்டத்தின் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 06






‘பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்’ என்பார்கள்.

அந்த மாதிரி இந்த நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்ததும் சபாநாயகர் பதவியை பெற்றுக் கொண்ட அசோக ரன்வல, பின்னர் தமது கலாநிதிப் பட்ட சர்ச்சையை அடுத்து, சபாநாயகர் பதவியைத் துறந்து, சாதாரண எம். பியாக ஆரவாரமின்றித்தான் இருந்தார். ஆனாலும் விதி வலியது. அவரை விடுவதாக இல்லை.

நேற்று முன்தினம் இரவு அவர் செலுத்தி வந்த ஜீப் சபுகஸ்கந்தையில் ஒரு மோட்டார் சைக்கிளையும் பின்னர் ஒரு காரையும் மோதித்தள்ள, அவர் இப்போது சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார். ஆறு மாத சிசு உட்பட நால்வர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் மற்றும் விபத்தைத் தவிர்க்கத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் அவர் கைது செய்யப்பட்டார். என்னும், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரும் ஆஸ்பத்திரியில் 06






# அமெ. விமானத்தில் திருகோணமலைக்கு நிவாரணப் பொருள்கள் வந்து சேர்ந்தன!

(எஸ்.கீதபொன்கலன்)

அமெரிக்க விமானப்படையின் விமானம் நேற்றைய தினம் திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் சீனக் குடா விமான நிலையத்தில் வந்திறங்கியது.

இலங்கையின் பேரிடர் நிவாரண உதவிகளை விரைவாக இலங்கை முழுவதும் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ் விமானம் மூலம் நிவாரணப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் டித்வா புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கிண்ணியா, மூதூர், வெருகல் பகுதிகளின் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து வீடு திரும்பிய 250 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அவுஸ்திரேலிய உதவி திட்டம், இங்கிலாந்து உதவித் திட்டம். யுனெப்ஸ் மூலம் வழங்கப்பட்ட நிவாரண பொருள்களே இவ்விமானத்தில் எடுத்து வரப்பட்டிருந்தன. இந்நிவாரண உதவிகளை அகம் மனிதாபிமான வள நிறுவனம், விருத்தி வலையமைப்புடன் இணைந்து உரிய இடங்களுக்கு எடுத்துச் சென்று வழங்கி உள்ளது.

மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், வெருகல் பிரதேச செயலாளர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி இச்சேவையின் கீழ்,வொக்கோட் நிறுவனம், மக்கள் சேவை மன்றம் ஆகிய நிறுவனங்கள் நிவாரண உதவிகளை உரியவர்களுக்கு வழங்கின.

இதன் அடிப்படையில் கிண்ணியா பிரதேசத்தில் 50 குடும்பங்களுக்கு மக்கள் சேவை மன்றம் நிறுவனமும், மூதூர் பிரதேசத்தில் 100 குடும்பங்களுக்கு வொக்கோட் நிறுவனமும், வெருகல் பிரதேசத்தில் 100 குடும்பங்களுக்கு அகம் நிறுவனமும் நேற்றைய தினமே நிவாரணங்களை வழங்கி இருந்தன.

இந்நிகழ்வில் யுனெப்ஸ் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் மற்றும் அகம் மனிதாபிமான வள நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்திற்கு நிவாரண உதவிப் பொருகளை எடுத்து வந்த விமானத்தில் அமெரிக்கத் தூதுவர் யூலி சாங்கும் திருகோணமலைக்கு நேற்று வருகை தந்திருந்தார்.








# ஒன்றாக முன்னோக்கி





# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளை பாதுகாக்கும் வகையில் விசேட நடமாடும் சேவை

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் பாரிய இழப்பை சந்தித்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான இலவச சிகிச்சை அளிக்கும் நடமாடும் சேவை நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட ரீதியில் மன்னார் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கனியூட் பேபிதுரை வின்சன்ட் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் பாரிய இழப்பை சந்தித்துள்ளனர்.

மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

குறிப்பாக ஆடு, மாடு, கோழி, பன்றி, எருமை மாடு போன்ற இழப்புக்களைப் பண்ணையாளர்கள் சந்தித்துள்ளனர்.

இந்தப் பண்ணையாளர்களின் எஞ்சிய உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையிலும், பண்ணையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்டம் முழுவதும் கால்நடை வைத்தியர்கள் ஆறுபேர் உள்ளடங்கலாக மிருக வைத்திய குழு ஒன்றை அமைத்து 6 குழுக்களாக வெவ்வேறு இடங்களில் இலவசமாக கால்நடை வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய அமைச்சு, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், இலங்கை கால்நடை அரச வைத்தியர் சங்கம், இலங்கை கால்நடை வைத்தியர் சங்கம் ஆகியோர் அனுசரணை வழங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் தொடர்ந்தும் தமது தொழிலை முன்னோக்கி செல்வதற்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# சேதமடைந்துள்ள கண்டாவளைப் பாலம் நேரில் பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.!

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு - பரந்தன் ஏ -35 பிரதான வீதியில் கண்டாவளைப் பகுதியில் அமைந்துள்ள பாலம் அணமைக் கால வெள்ள அனர்த்தம் காரணமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் அந்தப் பாலத்தினூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகன் நேற்று அந்த இடத்துக்கு நேரில் சென்று நிலமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

# மலையகத்துக்குள்ளேயே அந்த மக்களினுடைய வாழ்வியலை உறுதிப்படுத்த வடக்கு, கிழக்கு, மலையகமாக இணைவோம்!

## அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



(பா.சதீசன்)

மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதிபடுத்த வடக்கு – கிழக்கு – மலையகமாக ஒன்றுபடுவோம். மலையகமே மலையக மக்களின் தாயகம். அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌரவம் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எல்லா கோயில் காணிகளிலும், எல்லா சிதம்பரத்து காணிகளிலும், எல்லா தர்ம காணிகளிலும் மலையக மக்களைக் குடியேற்றி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் இங்கு வந்தால் விவசாயத்தில் செழிப்பாகும் என இயற்கை பேரிடருக்கு முகம் கொடுத்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள மலையக மக்கள் விடயத்தில் அவசர உணர்வு பூர்வமான கருத்தை வெளியிட்டிருக்கிறார் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன். அவரது உணர்வு பூர்வமான உளவெளிபாட்டுக்கு மலையக சமூக ஆய்வு மையம் நன்றி கூறுகின்றது. இவ்வாறான உணர்வு பூர்வமான கருத்தைத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் வெளிப்படுத்தி இருந்தார். மலையக மக்களின் நிலையை இனச் சுத்திகரிப்பு மற்றும் இன அழிப்புக்கு உள்ளாகிவரும் மக்களின் நீண்டகாலப் பாதுகாப்பு கருதி அரசியல் அறவியலில் நின்று கூட்டாக முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதே எமது கருத்து நிலைப்பாடு.

மலையக மக்களும் 1948 இற்குப் பின்னர் திட்டமிட்ட இன அழிப்புக்கும் இன சுத்திகரிப்புக்கும் உள்ளாகி, நாளாந்தம் சிதைவுகளையே சந்தித்துவரும் ஒரு தேசிய இனமாகும். தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், தற்போதைய ஜனாதிபதியுமான அநுரகுமார திஸநாயக்க மலையகத்தில் வீடற்றிருக்கும் 1,50,000 பேருக்கு கொடுப்பதற்கு போதுமான காணி மலையகத்தில் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் கூறத் தொடங்கி இருக்கின்றார். இது அவர்களின் நீண்ட கால அரசியல் சித்தாந்தம். அதுவே சிங்கள பௌத்த கருத்தியலுமாகும்.

தற்போது அவர்கள் பேரிடர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மலையக மக்களைச் சிதைக்க முயல்வதை இன அழிப்புக்கும் இன படுகொலைக்குப் முகம் கொடுக்கும் சமூகமாக அதனை தடுத்து நிறுத்துவதற்கும் அவர்களின் எதிர்கால அரசியல் பாதுகாப்பையும் கருதி கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் வேண்டும்.

மலையக மக்கள் நாட்டின் சனத்தொகையில் இரண்டாம் இடத்தில் இருந்த போது அவர்களின் அரசியல் எழுச்சிக்கு பயந்து 1948 ஆம் ஆண்டில் அந்த சமூகத்தின் வாக்குகளை பறித்ததோடு மட்டும் நின்று விடாது, இந்தியாவின் அயல் நாடுகளுடன் அரசியல் உறவில் ஏற்பட்டிருந்த விரிசலை தனக்குச் சாதகமாக்கி 1964 இல் பல லட்சம் மலையகத்தவர்களை நாட்டை விட்டே வெளியேற்றும் ஒப்பந்தத்தை (சிறிமா-சாஸ்திரி) சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கொண்டார். இது இரு நாடுகளும் இணைந்து நடத்திய முதலாவது இனப்படுகொலை என்றே அடையாளப் படுத்தலாம்.

அதே சிறிமாவோ பண்டார நாயக்க தமது 1970 - 77 ஆட்சிக் கால கட்டத்தில் தோட்டங்களை அரசுடைமையாக்குவதாகக் கூறிச் சிங்களமயமாக்கிப் பல தோட்டங்களில் சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தை அவர்களின் வாழ்விடத்தில் இருந்து சிங்கள காடையர்களைக் கொண்டு அடித்து துரத்த இடமளித்த வரலாறும் உண்டு.

மேலும் நாட்டின் பொருளாதார சீர்திருத்த செயல் திட்டத்தை முன்னெடுத்து மலையகத்தவர்களைப் பட்டினிச் சாவுக்குள் தள்ளிக் கொலை செய்ததையும் மறக்க முடியாது.இதனால் பல ஆயிரம் குடும்பங்கள் உயிர் பாதுகாப்புத் தேடி சுயமாகவும், காந்திய வழிகாட்டலோடும் வடக்கு மற்றும் கிழக்குக்குச் சென்று குடியேறினர். இதனையே சிங்கள பௌத்தமும் விரும்பியது.

அடுத்து வந்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி காலத்தில் திறந்த பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி எனும் பேரில் மலையகத்தவர் வாழிடங்கள் சூறையாடப்பட்டு அந்தந்த இடங்களில் இருந்து மலையக மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் காலத்தில் நடந்தத் திட்டமிட்ட இனவாத வன் செயலின் காரணமாகப் பாதிக்கப்பட்டோர் வடக்குக் கிழக்குக்கும் இந்தியாவுக்கும் சென்றனர். மலையகத்தை அபிவிருத்தி திட்டத்துக்குள் கொண்டுவராது, பெருந்தோட்டத் தொழிலுக்கு அப்பால் தொழில் வாய்பை உருவாக்காது, கல்வி, சுகாதாரத் துறைகளை மேம்படுத்தாது, கைவிட்டதால் ஆயிரக்கணக்கானோர் மலையகத்தை விட்டு தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் தினமும் வெளியேறிவருகின்றனர். இதில் மௌன மகிழ்வு காண்பது சிங்கள – பௌத்த பேரினவாதமே.

அதுமட்டுமல்ல, கடந்த காலங்களில் மலையக மக்களுக்கு காணி கொடுப்பார்கள் எனக் கூறிய எந்தப் பேரினவாத ஆட்சியாளரும் அதனைக் கொடுப்பதற்கு துணியவில்லை. அரசியலுக்காக வீடுகளைக் கட்டி, சலுகை மாயைக்குள் அவர்களைத் தள்ளி, தேர்தல் அரசியலையே முன்னெடுத்தனர். வீட்டுக்குரிய உரிமை முழுமையாக இதுவரை கொடுக்காது இருப்பதும் காணி உரிமை நிரந்தரமாக அவர்களுக்கு கிடைக்கக் கூடாது எனும் மனநிலையிலாகும்.

மலையக மக்கள் தமக்கே உரிய இன அடையாளங்களைப் பாதுகாப்பு தேசிய இனமாக வளர்ந்து நிற்கும் சூழ்நிலையில் அவர்கள் தங்களது கடும் உழைப்பாலும் உயிர்த்தியாகத்தாலும் உருவாக்கிய மலையகம் எனும் தேசத்தில் வாழ்வதே அவர்களுக்கான அரசியல் பாதுகாப்பாகும்.

தற்போது நிகழ்ந்திருக்கும் இயற்கை பேரிடர் இக்கட்டான சூழலை பயன்படுத்தி மலையக மக்களின் நில உரிமையை தட்டி பறிக்கும் செயல்பாட்டுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ எவரும் துணை போகக்கூடாது.

நாட்டில் வடக்குக் கிழக்குத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் இந்துக்கள் அல்லது சைவர்கள் என்பதற்காக இதுவரை ஒடுக்கப்படவுமில்லை, படுகொலை செய்யப்பட்டவுமில்லை. தமிழர்கள் என்பதற்காகவே நாம் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றோம்.

அழிக்கப்படுகின்றோம். நில பறிப்புக்கு உள்ளாகின்றோம். இதற்கு எதிராக கூட்டு அரசியல் செயல்பாடு என்பது அவரவர் நிலத்தில் அவரவரது அடையாளங்களோடு அரசியல் கௌரவத்தோடு வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதாகும்.

இயற்கை அனர்த்தத்தை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் மலையக மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துக்கு எடுக்கும் முயற்சிக்கு எந்த வகையிலும் எவரும் இடமளிக்காது இருப்பதோடு அவர்களின் அரசியல் பாதுகாப்பு மிகு எதிர்காலம் கருதி மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதிபடுத்த வடக்கு, கிழக்கு, மலையகமாக ஒன்றுபடுவோம். மலையகமே மலையக மக்களின் தாயகம். அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌரவம்.- என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

போதையில் சாரத்தியம் செய்தமைக் காகவே அவர் கைது செய்யப்பட்டார் என சமூக ஊடகங்களில் முதலில் பரபரப்பா கச் செய்திகள் வெளியாகின. ஆயினும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அதனை மறுத்திருக்கிறார்.

ஆனால் இந்த விபத்தில் பாதிக்கப் பட்ட தரப்புகள், உரிய நேரத்தில் அசோக ரன்வல மீது போதைச் சோதனை நடத் தப்படவில்லை, வேண்டுமென்றே காலம் தாமதிக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டுகின் றன என சில செய்திகள் வெளியாகின.

அரசாங்கம் மறுத்தாலும் இது தொடர்பில் உண்மை நிலைவரம் அடுத்து வரும் நாள்களில் வெளிவரும் என எதிர் பார்க்கலாம். அதுவும் நாளைய ஞாயிறு இதழ்களில் இந்த விடயம் முக்கிய இடம் பிடிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

இந்த வருடத்திற்கான நாடாளு மன்ற அமர்வு இன்னமும் இருக்கின் றதா என்பது தெளிவில்லை. இந்த மாதத்தின் மூன்றாவது வாரத்துக்குரிய – இரண்டாவது கட்ட – அமர்வு நடக்க வேண்டும். எனினும் அதனை நடத்துவ தில் ஆளும் தரப்புக்கு ஈடுபாடு இல்லை என்று கூறப்படுகின்றது. கிறிஸ்துமஸ் விடுமுறை மற்றும் வருட இறுதி விடுமுறை விடயங்களைக் காட்டி நிரந்தரமாக அடுத்த வருடம் ஜனவரி இரண்டாம் வாரத்திற்கு அமர்வைத் தள்ளிப் போடுவது அரச தரப்பின் விருப்பாக இருக்கின்றது எனத் தெரிகிறது.

வேண்டுமானால் ஒரு நாள் சபை யைக் கூட்டி உத்தியோகபூர்வமாக அடுத்து வருடத்திற்கு ஒத்திவைக்கும் நடவ டிக்கை மேற்கொள்ளப்படலாம் என்றும் சில வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இப்போதைய நிலையில் நாடாளு மன்றம் கூடுமானால் அனர்த்தப் பேரிடர் கால நெருக்கடிகள், நிவாரண கால குளறுபடிகள் போன்ற பல்வேறு விடயங்கள் நாடாளுமன்றத்தில் பிய்த்து துதறப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. அதனைத் தவிர்த்து, காலத்தைத் தள்ளிப் போட்டு, விவகாரத்தின் சூடு ஆறிய பின் னர் நாடாளுமன்றைக் கூட்டுவதை அரசுத் தரப்பு விரும்புவதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா வுக்கு ஆதரவும் செல்வாக்கும் பெயரும் அதிகரித்து வருவதாக சில சுயாதீன ஊடக தரப்புகள் தகவல் வெளியிட்டாலும், ஒட்டுமொத்தமாக அரசுக்கு ஆதரவான மனநிலை மாறி, எதிர்ப்பு மேலோங்கி வருவதாக சில அவதானிகள் தெரிவிக் கின்றனர்.

பேரிடர் மீட்பு நடவடிக்கைகளும் நிவாரண வழங்கலில் உள்ள குழப்பங்க ளும் இந்த அரசுக்கு நிரந்தரமாக கெட்ட பெயர் வாங்கித் தந்துவிடும் என்றே தோன் றுகின்றது.

பார்ப்போம் என்ன நடக்கப் போகின் றது என்பதை...!

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய ஆளுகைக்குள் இருக்கும் அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சுப்பையா நளினி என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நாட்டில் தொடரும் அசாதாரண கால நிலையைத் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மக்கள் பல்வேறு அவலங்களைச் சந்தித்து வரும் நிலை யில் நீர்நிலைகளும் நிரம்பியுள்ளன.

இவ்வாறு நிகழ்ந்த சம்பவம் குறித்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத் தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர்.

## எம்.பியாகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் உருவெடுத்திருந்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர் படுதோல்வியடைந்திருந்ததால் அரசி யல் செயற்பாடுகளில் இருந்து சற்று ஒதுங் கியிருந்தார்.

எனினும், ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் மீண்டும் தீவிர அரசியலில் களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டின் பின்னர் நாடாளு மன்றத்துக்குச் செல்லும் எண்ணத்தில் காய்களை நகர்த்தி வருகின்றார் என்று எதிர்க்கட்சிகளின் அரசியல் வட்டாரங்க ளில் பேசப்படுகின்றது.

## முன்னாள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அசோக ரன்வல ஓட்டிச் சென்ற ஜீப் வாகனமும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சப்புகஸ்கந்த - டெனிமல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணிய ளவில் இந்த விபத்து நிகழ்ந்துள் ளது.

இதன்போது, காரில் பயணித்த 25 வயதுடைய பெண், அவரது ஆறு மாதக் குழந்தை மற்றும் 55 வயதுடைய தாய் ஆகியோர் காயமடைந்து வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில், குழந்தை விசேட சிகிச்சைக் காகக் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள் ளது.

ஜீப்பில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வலவும் காய மடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுபின்னர்அவர்கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார்.

அசோக ரன்வல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நேற்று மாலை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 2 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.

## பல்கலை மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாணவர்கள் 19 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள வீடொன்றுக்குக் கனிஷ்ட மாண வர்களை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 19 பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவர்கள் கடந்த மாதம் 29ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நேற்று வரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த பின்னர் நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மேலதிக நீதிவான், சந்தேகநபர்கள் 19 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 24ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

## இயற்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இயற்கை அனர்த்தங்களால் சேத மடைந்துள்ளநாவலப்பிட்டி—நுவரெலியார யில் பாதை புனரமைப்புப் பணிகளை நேற்றுப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது:-

"நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை யைத் தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தால் மலையக ரயில் பாதை கள் பாரியளவில் சேதமடைந்துள்ளன. ரயில் பாதைகளை விரைவாக புனரமைப் பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

ரயில் திணைக்களத்தின் சேவை யாளர்கள், இராணுவத்தினரின் ஒத்து ழைப்புடன் சேதமடைந்துள்ள ரயில் பாதை கள் தற்போது கட்டம் கட்டமாகப் புன ரமைக்கப்படுகின்றன. வெகுவிரைவில் இந்தப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஜனாதிபதி விடுத்த அறிவிப்புக்க மைய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இழப்பீடு வழங்கப்படும். இயற்கை வளங்களை அழித்து குடியி ருப்புக்களை அமைத்தால் அதன் பிர திபலன் பாரதூரமானதாக அமையும் என்பதற்குத் தற்போதைய நிலைமை ஒரு எடுத்துக்காட்டாகக் காணப்படுகின் றது.

மலைகள், ஆறுகளை அண்டிய பகுதிகளில் குடியிருப்புக்களை அமைப் பது குறித்து இனி கடுமையான திட்டங்கள் செயற்படுத்தப்படும். தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் தோற்றம் பெறாத வகையில் நிலையான தீர் மானங்களைச் செயற்படுத்த வேண் டும்.

அனர்த்தத்தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாகி யுள்ளதைக் காட்டிலும் எதிர்க்கட்சியி னர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். அவர்கள் ஊடக சந்திப்புக்களை நடத்திக் கொண்டு குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்கின்றார் கள்.

மக்கள் மீது அக்கறை இருக்குமாயின் எதிர்க்கட்சியினர் ஊடகங்களுக்கு மத்தி யில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்காமல் மக்கள் மத்தியில் சென்று அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்க்கட்சியினர் இந்தளவுக்குக் கீழ்த்தரமாகச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இவர்களின் நிலைமை கவலைக்குரியது." - என் றார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டையடுத்து நவாலி கிழக்கில் 18 வீடுகளுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டையடுத்து வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டை சுத்தப்படுத்துவதற்கான 25,000 ரூபா கொடுப்பனவுக்கு 18 வீடுகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

நவாலி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வெள்ளநீர் வீட்டுக்குள் உட்புகுந்த வீடுகளுக்கு அரசினால் வழங்கப்படும் 25,000 ரூபா நிவாரணம் வழங்கப்படாமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியிருந்தது.

இதன் படி பிரதேச செயலகத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் முறைப்பாட்டாளர் உட்பட்ட 18 வீடுகளுக்கான சேதவிவரங்கள் சிபாரிசு செய்யப்பட்டு அரசாங்க அதிபருக்கு நிதி ஒதுக்கீட்டுக்காக அனுப்பப்பட்டுள்ளன என்றும், முறைப்பாட்டாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சமுகமளிக்கும்போது வெள்ள நிவாரணம் தொடர்பான சுற்று நிருபங்கள் மற்றும் நிதிப்பிரமணம் என்பவற்றின்படி முறைப்பாட்டாளருக்கான கொடுப்பனவை வழங்கமுடியும் என்றும் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறைப்பாட்டாளர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது நேரில் வந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும்படி பிரதேச செயலாளரால் முறைப்பாட்டாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

# சீரற்ற வானிலையையடுத்து மரக்கறி விலை அதிகரிப்பு



நாட்டில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக போஞ்சியின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.

அதன்படி, நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் 700 ரூபாய் முதல் 1000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் போஞ்சியின் விலை மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் 1100 ரூபா முதல் 1120 ரூபாவுக்கும் தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தில் 800 ரூபா முதல் 1000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் கறி மிளகாய் தம்புதேகமவில் 950 ரூபாய் முதல் 1000 ரூபாவுக்கும் நுவரெலியாவில் 800 ரூபா முதல் 850 ரூபாய்க்கும், மீகொடையில் 800 ரூபா முதல் 810 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பீட்ரூட் ஒரு கிலோகிராம் நுவரெலியாவில் 230 ரூபாவுக்கும், கெப்பிட்டிபொலவில் 280 ரூபாவுக்கும் தம்புத்தேகமவில் 340 ரூபா முதல் 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

எனினும், 1000 ரூபாவுக்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்ட தேசிக்காய், கடந்த சில நாள்களாக பாரியளவில் குறைவடைந்துள்ளது.

அதன்படி, நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் தேசிக்காய் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, லீக்ஸ் ஒரு கிலோகிராம் நுவரெலியாவில் 200 ரூபாவுக்கும் கெப்பிட்டிபொலவில் 170 ரூபாவுக்கும், தம்புத்தேகமவில் 200 ரூபா முதல் 230 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் வெலிமடை உருளைக்கிழங்கு கெப்பிட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில் 220 ரூபாவுக்கும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் 170 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில், உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 290 ரூபாவுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தக்காளி ஒரு கிலோகிராம் கெப்பிட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில் 200 ரூபாவுக்கும் நுவரெலியாவில் 300 ரூபாவுக்கும் தம்புத்தேம 140 ரூபா முதல் 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# அச்சிடப்படாமல் இருக்கும் சாரதி அனுமதிப்பத்திரங்கள்

தற்போது நாட்டில் 7 லட்சத்திற்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன என பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

புதியதாக இரண்டு அச்சிடும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அச்சிடும் பணிகள் இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலுவையில் உள்ள அனைத்து அட்டைகளையும் 6 மாதங்களுக்குள் அச்சிட்டு முடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேலை செய்ய விடுங்கள்!

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயல்முறை அரசியல் மயமாக்கப்படாதிருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியிருக்கின்றார்.

தெற்கில் இந்த நிவாரண செயல் முறையில் சலுகைகளைப் பெற 'பிரஜா சக்தி' போன்ற சமூகக் குழுக்களின் அலுவலர்களது சான்றுபடுத்தலையும் பெற வேண்டும் என அரசாங்கத்தின் பலம்வாய்ந்த அமைச்சர்கள் கூறுகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறியிருக்கின்றார். நிவாரண உதவிகள், சலுகைகளைப் பெறுவதற்குத் தேவையான உறுதிப்படுத்தல் அரச அதிகாரிகளிடமிருந்து மாத்திரமே பெறப்பட வேண்டுமென்றும், இதற்கு கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர், கமநல உத்தியோகத்தர், பிரதேச செயலாளர், அனர்த்த நிறுவன அதிகாரிகள் போன்ற அரச அதிகாரிகளின் சான்றிதழ் மாத்திரம் போதுமானதென்றும், மேற்படி நிவாரணங்களை வழங்க ஏனையோரின் பரிந்துரைகள் தேவையற்றவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கின்றார்.

இந்த நிவாரண செயல்முறை அரசியல் மயமாக்கப்படாதிருக்க வேண்டும். தூய்மையான - ஒழுங்கான - பொறுப்புணர்வுள்ள - பொறிமுறையொன்றை செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இத்தகைய குற்றச்சாட்டுகள் ஒரு புறம் என்றால், மறுபுறத்தில் நிவாரணம் மற்றும் இழப்பீடுகளை விநியோகிப்பதிலும் அது தொடர்பான கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதிலும் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் பல முனைகளிலிருந்தும் அதிகளவில் அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

சாகுபடி, கால்நடைகள் மற்றும் சிறு வணிகங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு விநியோகத்தின் போது நெருக்கடிகள், பதற்றங்கள், சிக்கல்கள் அதிகரித்துள்ளன என இந்த விடயத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தெளிவான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டிருந்தாலும், கள அதிகாரிகள் தங்களுக்கு உரிமையில்லாத பணம் கோரும் நபர்களால் தினமும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார்கள் என்று ஒரு மூத்த அதிகாரி கூறினார்.

இதே போல வீடுகள் மற்றும் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும்போது, மதிப்பீடுகள் தொடர்பாக அடிக்கடி சர்ச்சைகள் எழுவதால், தாங்கள் விமர்சனங்களை எதிர்கொள்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத இறுதிக்குள் முழு நிவாரணம் மற்றும் இழப்பீடுகளுக்கான மதிப்பீட்டுச் செயல்முறையையும் முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள பின்னணியில் இந்த நிலைமை நீடிக்கிறது.

இதற்கிடையில், பாதிக்கப்பட்ட தரப்புகளின் முன்னணிப் பணிகளைக் கையாளும் கிராம சேவையாளர்களும், தாங்கள் கடுமையான அழுத்தத்தில் இருக்கின்றனர் எனப் புலம்புகிறார்கள். பல்வேறு அரசியல் குழுக்களிடமிருந்தும் அழுத்தங்கள் வருகின்றன என அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய நிவாரணப் பணியாளர்களின் கடமையையும் பொறுப்பையும் கருத்தில் கொண்டு, தேவையற்ற அழுத்தம் அல்லது குறுக்கீடு இல்லாமல் தங்கள் கடமைகளைச் செய்ய அவர்களுக்கு நியாயமான சுதந்திரம், அதிகாரம் மற்றும் வளங்கள், வசதிகளை அனுமதிப்பது அவசியம். பேரிடர் சூழ்நிலைகளில் அரசியல்வாதிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆனால் முன்னணி நடவடிக்கைகளைக் கையாளும் அதிகாரிகளின் பணியை சீர்குலைக்கும் வகையில் அது இருக்கக் கூடாது.

அந்த அரச அதிகாரிகளை சுதந்திரமாக - சுயாதீனமாக - நீதியாக - செயற்பட விடுங்கள்.




# முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை

(பா.சதீசன்)

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, Clean Sri Lanka செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு என்பன "க்ளீன் ஸ்ரீ லங்கா – ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்த நாடு" என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக நடமாடும் சேவை மற்றும் விசேட மக்கள் நலன்புரி வேலைத்திட்டம் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் 1,109 பேர் கலந்துகொண்டு பயனடைந்திருந்தனர். இதன்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டமையுடன் வறுமையில் கல்வியைத் தொடரும் ஒரு தொகுதி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இவற்றுடன் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தின் விசேட மருத்துவமுகாம், விசேட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலை வாய்ப்பு மற்றும் உயர் தொழிற்கல்வி வாய்ப்புகள் தொடர்பான வழிகாட்டுதல்கள், பொது மக்களிற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள் என்பன மிகச்சிறப்பான முறையில் இடம்பெற்றன. மக்கள் இந்த நடமாடும் சேவையில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.












# சம்மாந்துறைப் பொலிஸாரினால் நேற்று மான் இறைச்சியுடன் இரண்டு பேர் கைது

**(தில்சாத் பர்வீஸ்)**

பளவழிகிராமம் (12 வீட்டுத்திட்டம்) புதிய வளத்தாப்பிட்டி, சம்மாந்துறை பகுதியில் தம்வசம் மான் இறைச்சி உள்ளிட்ட பொருள்களை வைத்திருந்த இரு சந்தேக நபர்களை நேற்று வெள்ளிக்கிழமை மாலை சம்மாந்துறை ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த இரு நபர்களும் சிக்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து துப்பாக்கி மற்றும் மான் இறைச்சி, வான், மோட்டார் சைக்கிள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே.இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என். நிசாந்த பிரதீப் குமாரவின் வழிகாட்டுதலில், ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என். ரிபாய்டீன் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டதந்த் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரையும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வேட்டையாடச் சென்றவர் யானை தாக்கி உயிரிழப்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கருவலகஸ்வெவ – பொரலுகந்த வனப்பகுதிக்குள் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சென்ற ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். உயிரிழந்தவர் கருவலகஸ்வெவ – முரியகுளம் பகுதியைச் சேர்ந்த வாசலா முதியன்செலாகே சாமிலகுமார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்தவரின் உடலுக்கு அருகில், எண் அழிக்கப்பட்ட வெளிநாட்டுத் தயாரிப்பு துப்பாக்கியையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இறந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் ஜனநாயகமற்ற மாற்றங்களை ஏற்படுத்த முயலும் அரசாங்கம்

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு



அரசாங்கம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் ஜனநாயகமற்ற மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற வகையில் திருத்தத்தை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“பல்கலைக்கழக கல்வியாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் முறையான ஆலோசனைகள் இன்றி இத்தகைய ஒரு முக்கியமான மாற்றம் மேற்கொள்ளப்படக் கூடாது.

அதற்குப் பதிலாக, முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து எந்தவொரு உத்தியோகபூர்வ உரையாடலும் அல்லது பொதுத் தெளிவும் இன்றி அரசாங்கம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தில், பீடாதிபதிகள் மற்றும் பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகள் பல்கலைக்கழக கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கும் தற்போதைய முறையை நீக்குவது மற்றும் அந்த அதிகாரத்தை உபவேந்தருக்கோ அல்லது ஆளும் சபையிடமோ மாற்றுவது போன்ற முக்கிய மாற்றங்கள் அடங்கியுள்ளன.

உயர்கல்வித் துறை ஏற்கனவே பதட்டங்களை எதிர்கொண்டுள்ள ஒரு நேரத்தில், பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் தன்னிச்சையான அதிகாரத்தை உபவேந்தருக்கு வழங்குவது அல்லது பல்கலைக்கழக சபைக்குள் அதிகாரத்தை மையப்படுத்துவது கடுமையான சிக்கல்களை உருவாக்கலாம்.

மேலும், புதிய திருத்தத்தை பாராளுமன்றம் அங்கீகரிப்பதற்கு முன்னரே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பீடாதிபதிகள் மற்றும் பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகளின் நியமனங்களைத் தற்காலிகமாக நிறுத்துமாறு உபவேந்தர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்த அறிவுறுத்தல் சட்டபூர்வமான அடிப்படை இல்லாதது. ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள சட்டத்துக்கு முரணானது. உபவேந்தர்கள் தற்போது அமுலில் உள்ள சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்கள்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக நடைமுறையின் சரிவையும், சர்வாதிகார முடிவெடுக்கும் திசையை நோக்கி நாட்டை வழிநடத்த ஒரு முயற்சியையும் நிரூபிக்கிறது. பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர், திருத்தச் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, பரந்தளவிலான ஆலோசனைகளில் ஈடுபடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதிகாரத்தை மையப்படுத்தும் அல்லது பங்குதாரர்களின் பங்கேற்பை பலவீனப்படுத்தும் மாற்றங்களை அன்றி, ஆதாரம் சார்ந்த, நியாயப்படுத்தக் கூடிய சீர்திருத்தங்கள் மட்டுமே பின்பற்றப்பட வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரயில்வே துறையில் பெண்களுக்கு வாய்ப்பு




ரயில்வே துறையில் உள்ள அனைத்து பதவிகளுக்கும் பெண்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சட்ட மாஅதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

முன்னதாக, ரயில் நிலைய அதிபர் பதவிகளுக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை ஆட்சேபனைக்கு உட்படுத்தி, இரண்டு யுவதிகளால் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான உயர் நீதிமன்ற கட்டளைக்கு அமைய, ரயில்வே திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பிலேயே நேற்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சட்ட மாஅதிபர் சார்பில் முன்னிலையான அரச தரப்பு சட்டத்தரணி இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.



# சிறிய அளவிலான மழையும் பாரிய சேதத்தை ஏற்படுத்தலாம்

அதிதீவிர வானிலை காரணமாக நிலம் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகள் ஏற்கனவே முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, மிகச் சிறிய அளவிலானமேலதிகமழைவீழ்ச்சியும்கூடபாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. எனவே, மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மின்னல் தாக்கம் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை



நாட்டின் பல மாவட்டங்களுக்கு பலத்த மின்னல் தாக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில பகுதிகளுக்கு பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தப் பகுதிகளில் மழை பெய்யும் போது பலத்த மின்னல் மற்றும் தற்காலிக பலத்த காற்று வீசக்கூடும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 163.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதுளையின் நீல்பான்கந்துர பகுதியில் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# 30 வீத நிலப்பரப்பு மண்சரிவு அபாயத்தில்

## 14 மாவட்டங்கள் அடையாளம்

நாட்டில் தற்போது 14 மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமை குறித்த ஊடக சந்திப்பில் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர பின்வரும் விடயங்களைக் கூறினார்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 30 வீதமானவை மண்சரிவுகள் ஏற்படக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் நாட்டின் 34 வீதமான மக்கள் தொகையினர் வாழ்கின்றனர்.

இந்த மொத்தப் நிலப்பரப்பின் அளவு சுமார் 20,000 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். டித்வா சூறாவளியுடன் ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சி காரணமாக, மண்சரிவு அபாயம் உள்ள இடங்களைப் பரிசோதிக்குமாறு 2,710 கோரிக்கைகள் கிடைத்துள்ளன.

இவற்றில் இதுவரை 589 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களின் செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம், 10 மீற்றருக்கும் அதிகமாக மண்சரிவு ஏற்பட்ட 1,241 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில், வீடுகளுக்குப் பாதிப்பு இல்லாத 919 மண்சரிவுகள் மற்றும் வீடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய 322 மண்சரிவுகள் பதிவாகியுள்ளன.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துக்குக் கிடைக்கும் உடனடித் தகவல்களின் அடிப்படையில், 15,000க்கும் அதிகமான மக்கள் அபாயகரமான இடங்களிலிருந்து வெளியேறுமாறு பிரதேச செயலகப் பிரிவுகள் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தாங்கள் இருக்கும் நிலையைப் புரிந்துகொண்டு, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அங்கீகரிக்கப்படாத அல்லது வேறுவிதமான வீடுகள், கட்டடங்களில் வசிப்பவர்கள், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் ஆலோசனைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம். முன்னர் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது பல உயிர்கள் மண்மேடுகள் சரிந்ததாலேயே இழக்கப்பட்டன.

எனவே, பொதுமக்கள் இது குறித்து மிகவும் விழிப்புடன் இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு

மகப்பேற்று கிளினிக்குகளில் பதிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5,000 ரூபா ஊட்டச்சத்து கொடுப்பனவு வழங்கப்படும் என பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலவும் பேரிடர் சூழ்நிலை மற்றும் எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி நவம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மகப்பேற்று கிளினிக்குகளில் பதிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





# நீரை முறையாக முகாமைத்துவம் செய்திருந்தால் பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள முடிந்திருக்கும்

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

சீரற்ற காலநிலை தொடர்பில் முன் கூட்டி அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நீர் நிலைகளின் நீரை முறையாக முகா மைத்துவம் செய்திருந்தால் ஏற்பட்ட அனர்த்தத்தின் பாதிப்பை குறைத்துக் கொள்ள முடியுமாகி இருந்திருக்கும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் அரசியல் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடு கையில்,

"நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த் தம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் சர்வதேச ஊட கங்களின் காலநிலை அறிக்கை யில்அனர்த்தம்இடம்பெறுவதற்குசிலநாட் களுக்கு முன்பிருந்தே அதுதொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதிக மழைவீழ்ச்சி ஏற்படும் எனவும் எதிர்வு கூறியிருந்தன. அந்த சந்தர்ப்பத்திலே எமது நாட்டில் இருக்கும் நீர் தேக்கங்க ளின் நீரை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நீர் முகாமைத்துவம் என்பது உலகில் அனைத்து நாடுகளிலும் இருக்கிறது. இலங்கையிலும் இருக்கிறது.நீர் முகா மைத்துவ பிரிவுகள் பல்வேறு மட்டத்தில் இருக்கின்றன. மகாவலியில் நீர் முகா மைத்துவ பிரிவொன்று இருக்கிறது. நீர்ப்பாசனத்தில் பிரிவொன்று இருக்கி றது. அனர்த்த முகாமைத்துவ நிலை யத்திலும் இருக்கிறது. என்றாலும் வரலாற் றில் ஒருபோதும் இல்லாத அளவு எமது நாட்டுக்கு 500 மில்லி மீட்டர் வரை மழை பெய்திருக்கிறது. அதனால் பாரிய ளவில் எமது நீர் நிலைகளுக்கு நீர் கிடைத்தது. என்றாலும் இதனை மகா வலி நீர் தேக்கத்தினால் தனியாக கட் டுப்படுத்த முடியாது. அதேபோன்று நீர்ப்பாசன அதிகாரிகளாலும் தனியாக மேற்கொள்ள முடியாது. அப்படியா னால் அதற்காக ஒருங்கிணைக்கப் பட்ட வழிநடத்தல் ஒன்று அவசியமா கும்.

இந்த ஒருங்கிணைக்கப்பு நடவடிக் கையின்போது லாம், நட்டமடையும் தீர் மானத்தை மேற்கொள்ள யாராவது முன்வரவேண்டும். அவ்வாறு அந்த ஒருங்கிணைப்பு நடவடிக்கையை ஏற் படுத்தி, அனைத்து தரப்பினரையும், அழைத்து, அதற்கு அரசியல் தலைமைத் துவத்தை யாராவது பொறுப்பேற்று இதனை மேற்கொண்டிருந்தால், நீர் தேக்கங்களின் நீரை கட்டுப்படுத்தி, பாதிப் புக்களை குறைத்துக்கொண்டிருக்கலாம். அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு இது தொடர்பில் போதிய அனுபவமில்லா மையால். இந்த நடவடிக்கையை அவர் கள் தவறவிட்டுள்ளனர்.

இவ்வாறு இருந்தாலும் தற்போது அனர்த்தம் ஏற்பட்டு பாரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இதன் பின் னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகளையாவது முறையாக செய்ய தவறினால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். குறிப் பாக அரசாங்கம் சிந்தித்து செயற்பட தவ றினால் பாரிய தொற்று நோய்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். அதனால் அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்து அதனை முகாமைத்துவம் செய்த அனு பவமுள்ள தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் விரை வாக மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று பாரிய அனர்த்தம் ஒன்று ஏற்பட்டால், எவ்வளவு விரைவாக அதன் பாதிப்பு தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதன் மூலமே வெளிந- ாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். தற்போது இந்த இயற்கை அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்தும் இன்னும் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை இல்லை. இது தொடர்பான தகவல்களை விரைவாக பெற்றுக்கொள்ளும் அரச இயந்திரம் நாட்டில் இருக்கிறது. அதனை ஒன்றி ணைத்து வழிநடத்த தெரியாமல் இருப் பதே இதற்கு காரணமாகும்."- என் றார்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தகவல்களை பெற்று மோசடி செய்யும் கும்பல்

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறு வர்களின் தகவல்களை பெற்று மோச டியாகப் பயன்படுத்தும் ஒரு கும்பல் பற் றிய தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பொலிஸ் ஊடகப்பேச்சாளர்எஃப்.யூ.வுட்லர்இதனை தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஸ்டாலின் மீண்டும் தமிழகத்தின் முதல்வர் ஆவார்: திராவிட 'மொடல்' தொடரும் என்கிறார் உதயநிதி



வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார் எனவும் திராவிட மொடல் ஆட்சி தொடரும் என்றும் துணை முதல்வர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடக்கிறது.

இந்நிலையில், இது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மாநிலம் – மாவட்டம் – மாநகரம் – பேரூர் – ஒன்றியம் – கிளை – வட்டம் என்று தமிழ்நாட்டின் எல்லாத் திசைகளிலும் வேர்விட்டிருக்கிறது தி.மு.க. இளைஞர் அணி. வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் திமுக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது.

இளைஞர் அணியின் சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிப்பதற்கு என்று ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் சமூக வலைதளங்களுக்கான துணை அமைப்பாளர்களை நியமித்து வருகிறோம். ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகளை நியமித்திருக்கிறோம்.

இப்படி, முதல்வரின் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக விளங்குகிறது தி.மு.க. இளைஞர் அணி.

இப்படி, 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயல்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் தி.மு.க. இளைஞர் அணி மட்டுமே.

வரவிருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் மீண்டும் முதல்வர் ஆவார், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்னும் வெற்றிச் செய்திக்கு அடித்தளமாக இந்த 'இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு' அமையும் என்பது உறுதி." என்று தெரிவித்துள்ளார்.

# காற்று மாசு பிரச்சினை குறித்து நாடாளுமன்ற விவாதம் தேவை

## ராகுல் காந்தி தெரிவிப்பு



டில்லி உள்ளிட்ட முக்கிய நகரங்களில் நிலவும் காற்று மாசு பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதித்து தீர்வு காண வேண்டும் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தவிவகாரம்தொடர்பாகமக்களவையில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி,

"நமது நாட்டின் பெரு நகரங்களில் பல காற்று மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. லட்சக்கணக்கான குழந்தைகள் நுரையீறல் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் எதிர்காலம் அழிக்கப்படுகிறது. மக்களுக்கு புற்று நோய் வருகிறது. வயதானவர்கள் சுவாசிக்க சிரமப்படுகிறார்கள்.

இது ஒரு சுவாரஸ்யமான பிரச்சினை. ஏனெனில், இந்த விஷயத்தில் அரசாங்கத்துக்கும் எங்களுக்கும் (எதிர்க்கட்சிகளுக்கும்) இடையே முழுமையான உடன்பாடு இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். இது ஒரு சித்தாந்த பிரச்சினை இல்லை. இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். நாங்கள் அரசுக்கு ஒத்துழைக்க விரும்பும் ஒரு பிரச்சினை இது என்பதை அவையில் உள்ள அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

நமது நகரங்களில் காற்று மாசுவை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்து அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்குவது முக்கியம். அத்தகைய திட்டத்தை உருவாக்குவதில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இப்போதெல்லாம், அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் உடன்படக்கூடிய பிரச்சினைகள் மிக மிகக் குறைவு. காற்று மாசு குறித்து அரசாங்கம் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும். நீங்கள் எங்களை குற்றம் சொல்வது அல்லது நாங்கள் உங்களை குற்றம் சொல்வது என்பதாக இல்லாமல், விவாதம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும்.

விரிவான விவாதத்துக்குப் பிறகு பிரதமர், ஒவ்வொரு மாநகருக்கும் தனித்தனி திட்டத்தை வகுத்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன். அடுத்த ஐந்து அல்லது பத்தாண்டுகளுக்குள் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல் போகலாம். ஆனால், பிரச்சினையை எவ்வாறு நிவர்த்தி செய்வது மக்களின் வாழ்க்கையை எவ்வாறு எளிதாக்குவது என்பதில் நாம் முன்னேற்றம் அடைந்திருப்போம்." என தெரிவித்தார்.



# ஈரான் மற்றுமொரு பேரழிவை சந்திக்கும்: டொனால்ட் ட்ரம்பின் எச்சரிக்கின்றார்

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை ஒப்பந்தம் இல்லாமல் புதுப்பிக்க முயன்றால், அது மற்றொரு பேரழிவு தரும் தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலியப் படைகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஈரானின் அணுசக்தி திறன்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களுக்கு முன்பு ஈரான் ஒரு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் பேரழிவைத் தவிர்த்திருக்கலாம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சமூக ஊடகத் தடையை எதிர்த்து நீதிமன்றத்தை நாடிய நிறுவனம்




அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்துப் பிரபல சமூக ஊடக தளமான சுநனனவை அந்நாட்டின் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது.

முன்னதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் 16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக ஊடகக் கணக்கு வைத்திருப்பதைத் தடுக்கும் புதிய சட்டத்தைக் கடந்த 10 ஆம் திகதி முதல் அமுல்படுத்தியது.

உலகிலேயே முதன்முறையாகக் கொண்டுவரப்பட்ட இவ்வாறான சட்டத்தை எதிர்த்து, தற்போது சுநனனவை நிறுவனம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இந்தச் சட்டம் அவுஸ்திரேலிய அரசியலமைப்பால் குறிக்கப்பட்டுள்ள "அரசியல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை" மீறுவதாக உள்ளது என சுநனனவை கூறுகிறது.

இளம் வயதினர் அரசியல் விவாதங்களில் ஈடுபடுவதைத் தடுப்பது, எதிர்கால வாக்காளர்களின் அரசியல் புரிதலைப் பாதிக்கும் என்று அது வாதிடுகிறது.





# தலிபான்களுக்கு பகிரங்க எச்சரிக்கை

பாகிஸ்தானுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தான் தடுக்கத் தவறிவிட்டது என்று லஷ்கர் இ தொய்பா அமைப்பின் மூத்த தலைவர் யாகூப் ஷேக் தெரிவித்துள்ளார்.

அதே சமயம், பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குத் தமது மண்ணைப் பயன்படுத்த ஆப்கானிஸ்தானுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான்கள் இனி ஒரு குண்டை கூட பாகிஸ்தான் நோக்கிப் பிரயோகிக்கக் கூடாது என்றும் பாகிஸ்தான் எங்களுக்கு முக்கியம், பாகிஸ்தானுக்காக போராடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் பாதுகாப்பிற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்க உரிமை உண்டு என்று அவர் வலியுறுத்தினார்.

எந்தவொரு நாட்டிற்கும் எதிராகத் தீவிரவாதத்திற்காக ஆப்கானிஸ்தான் மண்ணைப் பயன்படுத்தக் கூடாது என்று அவர் எச்சரித்தார்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கமும் தலிபானும் தங்கள் மண்ணில் இருந்து பாகிஸ்தானுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் தொடங்கப்படாது என்று உறுதியளித்தால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் ”புதிய உச்சத்தை” எட்ட முடியும் என்று ஷேக் கூறினார்.

# அமைதி நோபல் வென்ற நர்கெஸ் முகமதி கைது



2023ஆம் ஆண்டுக்கான அமைதி நோபல் பரிசை வென்ற மனித உரிமைப் போராளி நர்கெஸ் முகமதியை, ஈரானிய பாதுகாப்புப் படையினர் நேற்று கைது செய்தனர்.

அண்மையில் காலமான ஒரு வழக்கறிஞரின் நினைவேந்தல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்கு நர்கெஸ் முகமதிசென்றபோது, இந்தக் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் அதிகாரிகள் நர்கெஸ் முகமதியை பலவந்தமாகப் பிடித்துச் சென்றதாக அவருடைய ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பேசுபொருளாகியுள்ளது.

நர்கெஸ் முகமதி, ஈரான் நாட்டில் பல ஆண்டுகளாகப் பெண்களுக்கு எதிராக நடக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிராகத் தொடர்ந்து போராடி வருபவர்.

குறிப்பாக, ஈரானில் பெண்களின் உரிமைகளை பறிக்கும் கட்டாய ஹிஜாப் சட்டங்களுக்கு எதிராகவும், பெண்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுவதை ஆதரித்தும் அவர் தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார்.

ஈரானில் நடந்த ‘பெண், வாழ்வு, சுதந்திரம்’என்ற இயக்கத்தின் முக்கியப் பங்களிப்பாளர்களில் நர்கெஸ் முகமதியும் ஒருவர். அவருடைய மனித உரிமைகளுக்கான சேவையை போற்றும் விதமாக, அவருக்கு கடந்த 2023ஆம் ஆண்டு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நேரத்தில் கூட, அவர் சிறையில்தான் அடைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சிறையில் இருந்தபடி, ஈரான் அரசுக்கு எதிராக அவர் எழுதிய கட்டுரைகளும் செய்திகளும் உலக அளவில் கவனத்தை ஈர்த்தன.

நர்கெஸ் முகமதி இதுவரை 10 இற்கும் மேற்பட்ட முறை கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவர் மொத்தமாக 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 154 சவுக்கடி தண்டனைக்கு ஆளாகியுள்ளார். தற்போது அவர் சிறைக்குச் செல்லாமல், பிணையில் இருந்தார்.

அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று ஐ.நா சபை உட்படப் பல்வேறு சர்வதேச அமைப்புகள் ஈரான் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன.

# முசல்பிட்டியில் ஒன்றரை வயதுக் குழந்தை தண்ணீர் பாத்திரத்தில் விழுந்து உயிரிழப்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி முசல்பிட்டி பகுதியில் ஒன்றரை வயது குழந்தை ஒன்று குளியலறை பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த சமயம் தண்ணீர் நிரம்பிய பாத்திரத்திற்குள் விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கற்பிட்டி முசல்பிட்டி பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பெற்றோர்கள் வீட்டில் இருந்த சமயம் குழந்தை குளிக்கும் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த நிலையில், தண்ணீர் நிரம்பிய பாத்திரத்துக்குள் முகம் குப்புற தவறுதலாக விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் சடலம் கற்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கற்பிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# பஸ் பெரும் பளத்தில் விழும் பாரிய விபத்தை சமயோசிமாகச் செயற்பட்டுத் தவிர்த்த சாரதி

## துன்ஹிந்த ஏற்ற வளைவில் நேற்றுச் சம்பவம்

**(நடராஜா மலர்வேந்தன் )**

இலங்கை போக்குவரத்து சபையின் கெக்கிராவ சாலைக்குச் சொந்தமான அநுராதபுரம் – பதுளை பஸ்ஸின் சாரதியின் துணிச்சல் மிக்க – சமயோசிதமான – செயலால் பாரிய விபத்து ஒன்று தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பதுளையிலிருந்து அநுராதபுரத்தை நோக்கிப் புறப்பட்ட பஸ் துன்ஹிந்த பகுதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு கட்டுப்பாட்டை இழந்தது. இதன் போது பஸ்ஸின் சாரதி தனது அனுபவத் திறனைப் பயன்படுத்தி ஆபத்தான நிலையில் பள்ளத்தை நோக்கிச்சென்ற பஸ்ஸை வளைவில் இருந்த மதிலை நோக்கித் திருப்பி, அதனுடன் மோதி பஸ்ஸை நிறுத்தியமையோடு, பேராபத்திலிருந்து பயணிகளின் உயிர்களையும் காப்பாற்றினார்.

பஸ் பள்ளத்தாக்குக்குச் சென்றிருக்குமானால், மீண்டுமொரு துயர சம்பவம் நேற்றும் பதிவாகியிருக்கும் என்று கூறப்பட்டது.







# வவுனியாவில் சேதமடைந்த ரயில் பாதைகளை பார்வையிட்ட நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

(கி.வசந்தன்)

வவுனியாவில் சேதமடைந்த ரயில் பாதைகளை நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏரங்க குணவர்த்தன நேரில் பார்வையிட்டார். நொச்சிமோட்டைப் பகுதியில் ஏற்பட்ட கடும் வெள்ளம் காரணமாக அப்பகுதி யில் இருந்த ரயில் பாதை கடுமையாகச் சேதமடைந்தது.

தற்போது அந்தப் பாதையைச் செப்பனிடும் பணிகளை இராணுவத்தினரின் உதவியுடன் ரயில்வேத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

சுமார் 125 மீட்டர் நீளமான சேதமடைந்த வீதியை செப்பனிடும் பணிகளை நேற்றைய தினம் நகர அபிவிருத்தி அமைச்சர் ஏரங்க குணவர்தன நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கு பணியாற்றும் இராணுவத்தினர் மற்றும் ரயில்வேத் திணைக்கள ஊழியர்களுடனும் அவர் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.





# மண்முனைப் பற்று பிரதேச சபை பாதீடு மேலதிக 9 வாக்குகளால் நிறைவேற்றம்!





(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனைப் பற்று பிரதேச சபை 2026 ஆண்டுக்கான பாதீடு மேலதிக 5 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிப்புக்கான விசேட சபை அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆரையம்பதி பிரதேச சபை தவிசாளர் காத்தலிங்கம் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர், பிரதி தவிசாளர் கலந்து கொண்ட இந்தச் சபை அமர்வில் தவிசாளரால் வரவு – செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர் வரவு – செலவு அறிக்கை மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன்போது இலங்கை தமிழரசு கட்சியின் 06 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுவின் 02 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஓர் உறுப்பினர், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியின் ஓர் உறுப்பினர், ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் என 11 உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஓர் உறுப்பினரும் வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தி கட்சியின் 04 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். இதன்படி 17 உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி சபையில் 09 மேலதிக வாக்குகளால் வரவு – செலவுத் திட்டம் வெற்றி பெற்றது.

# இன்றைய ராசி பலன்கள்- 13.12.2025




இன்று நல்ல பலன்கள் தரும் சிறப்பான நாள். விட்டுக்கொடுப்பதன் மூலம் நன்மை கிடைக்கும். இன்று நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

இன்று பணியிடத்தில் முன்னேற்ற கரமான பலன்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் ஆதரவு திருப்தியை அளிக்கும். பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடத்தில் அன்பை வெளிப்படுத்து வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கான கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. கவனமாக மற்றும் உறுதியுடன் உங்கள் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். தெய்வீகப் பாடல்கள் மற்றும் ஸ்லோகங்கள் சொல்வது நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் விவேகத்துடன் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். சக பணியாளர்களிடமிருந்து தொல்லைகள் ஏற்படலாம்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் தக்க வைக்க முடியாது. நல்லுறவைப் பின் இத்தகைய உணர்வுகளை புறக்கணித்தல் வேண்டும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று நீங்கள் வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சிவசப்படாமல் உங்களை நீங்கள் அமைதியாக வைத்திருங்கள். இனிமையான இசையைக் கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் பதட்டமான சூழல் காணப்படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. திட்டமிட்டு ஒழுங்கான முறையில் பணியாற்றுவது சிறந்தது.

உங்களின் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இதனை தவிர்த்தல் நல்லது.

குடும்பத்திற்காக அதிகம் செலவழிக்க நேரும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நிதிநிலைமையை சாதுர்யமாக கையாள்வது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக தோள் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இது உங்கள் மகிழ்ச்சியை பாதிக்கும்.

எனவே அமைதி தேவை. பிரார்த்தனை மேற்கொள்ளவும்.




இன்று சாதகமான நாளாக இருக்கும். உங்கள் நெருங்கிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள்.

உங்கள் பணிக்காக மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் திறமை பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று ஆரோக்கியமாய் இருப்பீர்கள்.




இன்று ஆற்றலும் தன்னம்பிக்கையும் குறைந்து காணப்படும். இந்த மன நிலை உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்களிடம் தனிமை உணர்வு காணப்படும். இன்று எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு எதிராக அமையும்.

உங்கள் பணிகளில் தாமதங்கள் ஏற்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையிடம் அற்ப விஷயங்களில் குறை காண்பீர்கள். நல்லுறவை ஏற்படுத்த சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் பணத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று நீங்கள் பதட்டத்துடன் குழப்பமான மனநிலையில் இருப்பீர்கள். உணர்ச்சி வசப்படாமல் அமைதியைப் பராமரித்தால் நற்பலன்களைக் காணலாம்.தெய்வீக இசை கேட்பது ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவை பராமரிக்க முடியாது.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மௌனம் கடைபிடிப்பது சிறந்தது.

நிதிநிலைமை இழுபறியாக இருக்கும். பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் நிதிநிலையை கண்காணிக்க வேண்டும்.




இன்றைய நாள் துடிப்பாக இருக்கும். உங்கள் நம்பிக்கை நிறைந்து காணப்படும். எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் இன்று எடுக்கலாம்.

பணியிடத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும்.இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களின் இனிமையான தொடர்பு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர் கால பாதுகாப்பு கருதி மணம் சேமிக்கும் வாய்ப்பும் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்கும். ஆரோக்கியத்தை பராமரிக்கும் அளவிற்கு உங்களிடம் ஆற்றலும் உறுதியும் காணப்படும்.




இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பலனைப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியிடச்சூழல் சீராக இருக்கும். புத்திசாலித்தனத்துடன் நீங்கள் செய்யும் முயற்சிகளில் உங்கள் நன்மதிப்பு உயரும்.

உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் காரணமாக உற்சாகமாக இருப்பீர்கள். இந்த நிகழ்சிகள் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். தேவைப்படும் அளவிற்கு பணம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 13.12.2025




இன்று சிறப்பான நாளாக இருக்கும். எதிர்பாராத நன்மைகள் இன்று காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் அளிக்கும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். உற்சாகமான வாய்ப்புகள் காணப்படும். பணியைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள்.

உங்களின் பாராட்டு வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். நீங்கள் இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் பயன் பெறக் கூடிய அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று திருப்தியற்ற குழப்பமான மனநிலையில் காணப்படுவீர்கள். அதனால் உரிய முயற்சிகள் எடுப்பது கடினமாக இருக்கும். தியானம் மேற்கொள்வது நல்லது.

அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்கலாம்.

உங்கள் துணையிடம் சாதரணமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க இது அவசியம்.

இன்று பணப்பற்றாக்குறை கவலையை அளிக்கும். பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. ஆன்மீகம் தொடர்பான பயணங்கள் நல்லது. இது அமைதியையம் ஆறுதலையும் தரும்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும். கூடுதல் பொறுப்புகள் ஏற்க வேண்டியிருக்கும். உங்கள் பணிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைப்பது கடினம்.

மன சஞ்சலங்களை எதிர் கொள்ள நேரும். இதனால் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிப்பது கடினமாக இருக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.




நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பும் முன்னேற்றமும் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் பெருவீர்கள்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் உண்மையான உறவினை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு திருப்தியை அளிக்கும். உங்கள் வங்கியிருப்பு வளர்வதைக் காண்பீர்கள்.

அமைதியான அணுகுமுறை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# மன்னாரில் ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள வெளிநாட்டுக் கஞ்சாவுடன் இருவர் கைது!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

மன்னார் பள்ளியமுனை பகுதியில் இலங்கை கடற்படை மற்றும் பொலிஸார் கடந்த புதன்கிழமை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சுமார் ஆறு கிலோகிராம் வெளிநாட்டுக் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

“முழு நாடுமே ஒன்றாக“ என்ற தேசிய நடவடிக்கையின் கீழ் “போதையற்ற நாடு – ஆரோக்கியமான பிரஜைகள் வாழ்க்கை” என்ற தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, எதிர்கால சந்ததியினரை போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து விடுவிக்கும் தேசிய பணிக்கு பங்களிக்கும் கடற்படை, தீவைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் உள்ளூர் நீர்நிலைகளை தொடர்ந்து கண்காணித்து போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளது.

வடமத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கஜபா, மன்னார் பிரிவு பொலிஸ் குற்றப்பிரிவுடன் இணைந்து பள்ளியமுனை பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, விற்பனைக்கு தயார் நிலையில் இருந்த சுமார் ஆறு கிலோகிராம் வெளிநாட்டு கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு கஞ்சா இருப்பின் மொத்த மதிப்பு ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேல் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் 34 மற்றும் 40 வயதுடைய பள்ளியமுனை பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் வெளிநாட்டு கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் காவல் நிலையத்தில் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனக் கடற்படை தெரிவித்துள்ளது